# எப்போதும் இருப்பவர்கள்

5

-சாதா-

# எப்போதும் இருப்பவர்கள் 5

சாதா

விலை அணா மூன்று

பனிரோஜா பதிப்பகம்
சென்னை-12.

# ஆஸ்கார் ஒயில்டு

கடவுள், அவர் தூதர்கள்; அரசன், அவன் கீர்த்தி; பிரபுக்கள், அவர்கள் ஆடம்பரம்—இவற்றைப் பற்றி எல்லாம், ஏடு ஏடாக எழுதி வந்த நேரத்தில், விக்டோரியா ராணி ஆண்ட அந்த நேரத்தில், பத்தினிப் பெண்களைப் பற்றி எழுதாமல், விபசாரிகளைப்பற்றி எழுத ஆரம்பித்தவன், அதையும் கவிதையாக எழுதி முடித்தவன், அந்த முதல் மனிதன்—ஆஸ்கார் ஒயில்டுதான்.

ரோமானியர்களைப் போல, அவர்கள் சிற்பங்களைப்போல, வர்ண சித்திரங்களைப்போல, இவன் அவ்வளவு அழகானவன். இந்தக் காலத்து நோபில் பரிசுக்குச் சமமான அந்தக் காலத்து நியூடிகேட் பரிசை இவன் எழுதிய கவிதைக்காக கொடுத்தார்கள். இந்தப் பரிசு கிடைத்ததும், கிளியோபாத்ராவின் முத்தம், சீசருக்கும் ஆண்டனிக்கும் கிடைத்ததுபோல தனக்கும் கிடைத்துவிட்டதாக சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

இவன், டாக்டர் வில்லியத்துக்கும், கவி ஜேனுக்கும் இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவன். பெண் குழந்தையைப்போல் இவனை அடிக்கடி சிங்காரித்து ஜேன் ஆனந்தப்படுவாள் படிக்கும் காலங்களில் இவன் குடிப்பது, சூதாடுவது, விபசார வித்தையில் ஈடுபடுவது—இப்படி இருந்து வந்தான் அழகான பெண்களை அடிக்கடி வரவழைத்து விருந்து நடத்துவான். பிறகு விபசாரம் நடத்துவான். இவன் அறையில் வெறும் புஸ்தகங்கள் மட்டும் இருப்பதில்லை. நீலவர்ணக் கோட்டுகள், பலவிதமான முகம் பார்க்கும் கண்ணாடிகள், முத்தமிட்ட பெண்கள் உதிர்த்துவிட்டுச் சென்றவில்லி புஷ்பங்கள், அவர்கள் போட்ட கையெழுத்துக்கள், நிர்வாணமாக

இருக்கும் பெண் பொம்மைகள், அந்தப் பொம்மைகளின் காலடியில் இவன் எழுதி வைக்கும் காமக் கவிதைகள்— இவ்வளவும் இருக்கும். ஒரு தடவை, இவன் ஒருத்தியுடன், 'உதட்டில் உதடு' வைத்துக் கொண்டிருக்கும் போது, பெண்ணின் தாய் பார்த்து விட்டாள். உடனே, காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

இவன் 1881-ல், 'ஆஸ்கார் ஒயில்டின் கவிதைகள்' என்ற ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டான். அந்தப் புஸ்தகத்தின் முன் பக்கத்தில், "இந்த நூற்றாண்டில், என்னைப்போன்ற ஒரு மேதையை வைத்துக் கொண்டே, கீட்ஸ், ரோசடி, மில்டன், ஷெல்லி, ஆர்னால்ட்டு, ப்ரவுனிங், ஸ்வின்பர்ன், வேர்ட்ஸ் ஒர்த்—இந்தக் கவிஞர்களை இனிமேல் யாராலும் ஜெயிக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன், இவர்கள் எல்லாம் வாக்கியங்களை வளர்த்துக் கொண்டே போகும் ஆடம்பர வார்த்தைகளை கவிதை என்று நிச்சயிப்பவர்கள்" என்று தன்னைப் பற்றி ஆரம்பிக்கிறான்.

இந்தப் புஸ்தகம், ஒரு நூல் நிலையத்துக்கு வந்தது. இதைப் படித்துப் பார்த்த ஒரு பேராசிரியர், பக்கத்திலிருந்த நண்பரிடம் "கௌரவத்தோடு ஒரு அவமானத்தை சேர்த்து வைக்க விரும்பவில்லை. அதனால் இந்த புஸ்தகத்தை மறுக்கிறேன். ஆஸ்கார் பாபத்தை செய்பவன், அவன் கவிதைகளும் பாபத்தைச் செய்யச் சொல்லுகின்றன. அது மட்டுமல்ல, இவன் புஸ்தகத்தில் 63 கவிஞர்கள் புகுந்து கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார். கவிதைத் தொகுப்பு திரும்பிப் போய் விட்டது.

சில வருஷங்களுக்குப் பிறகு டக்ளஸ் என்ற ஒரு பணக்காரப் பையனுடைய ஸ்நேகம், ஒயில்டுக்குக் கிடைத்தது. டக்ளஸ், கவிதை மோஹம் பிடித்தவன். நல்ல அழகன். இவன் அழகு ஆஸ்காரைக் கவர்ந்தது. ஆஸ்கார் அழகும் இவனைக் கவர்ந்தது.

பிறகு, ஆஸ்கார் புருஷனாகவும் டக்ளஸ் மனைவியாகவும் நடந்து கொண்டார்கள். அன்று முதல், ஆஸ்கார் இவனை டக்ளஸ் என்று கூப்பிடுவதில்லை. ஒரு பெண்ணின் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வந்தான். சில சமயம், இவனைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, "கண்ணே! உன்னுடைய சிவந்த ரோஜா உதடுகள், பாடுவதற்காகப் பிறக்கவில்லை. ஒரு பெண் முத்தம் ஒத்துவதற்காக பிறக்கவில்லை. இவை, எனக்காகவே பிறந்திருக்கின்றன, என் சாவு நேரம் வரையிலும், உன் உதடுகள் எனக்குச் சொந்தம்" என்று குடி மயக்கத்தில் சொல்வான். பிக்காடி ஓட்டலில், ஒரு சமயம் இப்படி நடந்துகொண்ட போது, நல்ல உதை வாங்கினார்கள்.

ஆஸ்காரின் இந்த நடத்தை, டக்ளஸின் தகப்பன், குவின்ஸ்பெரிக்குத் தெரிந்து விட்டது. மகனைக் கண்டித்தான். ஒயில்டுக்கும் எச்சரிக்கை எழுதினான். கட்டுப்படுவதாகத் தெரியவில்லை. அவர்கள் சரீர விஷயம் நீடித்துக் கொண்டே இருந்தது.

பிறகு, குவின்ஸ்பெரி, இந்த அழுக்கு நடத்தையை, ஊரெங்கும் தம்பட்டம் அடிக்க ஆரம்பித்து விட்டான். ஒயில்டைப் பற்றி அவமானப் பேச்சுக்கள் உலவிக் கொண்டே இருந்தன.

இந்தப் பேச்சுக்களைத் தாங்க முடியாத ஒயில்டு, குவின்ஸ்பெரியின்மேல் 'நஷ்ட வழக்கு'த் தொடுத்தான். ஆனால், ஆரம்பத்துக்குப் பிறகு அந்த வழக்கு, இவனுக்கே விரோதமாகி விட்டது.

உலகத்தில், பருவமாகாத பெண்ணை, ஒருவனுக்கு மனைவியாக இருப்பவளை, தன் மீது ஆசைப்படாதவளை, தனக்கு முறையில்லாத ஒருத்தியை—கெடுத்தான், காமம் புரிந்தான், என்பதற்காக அல்ல இந்த வழக்கு; பல வாலிபர்களை மனைவியைப்போல் உபயோகித்துக் கொண்டான், அந்தப் பாப நடத்தை செய்தான், என்பதற்காக. லஞ்சக்காரர்கள், இவன்



எப்போதும் இருப்பவர்கள்

விரோதிகள், விபசாரிகள், திறமையில் இவனை ஜெயிக்க முடியாதவர்கள்—இவர்கள் எல்லாம் ஒயில்டைக் குற்றவாளி என்று நிச்சயப்படுத்தினார்கள். பிறகு நீதிபதியின் தீர்ப்பும், அதை நிச்சயப்படுத்தியது. இரண்டு வருஷம், சிறைவாசம் கிடைத்தது. சிறையிலே இவன், எதை எதையோ நினைத்துக் கண்ணீர் தெளித்துக் கொண்டே இருந்தான். உதை வாங்கினான். ஊசி ஏற்றப்பட்டான். முள் சட்டத்தில் உட்கார்ந்தான். 1500 நிமிஷங்கள் இருட்டறையில் பசியோடு தள்ளப்பட்டான். ஒரு தடவை விழுந்து காது வலியையும் உண்டாக்கிக் கொண்டான்.

சிறைவிட்டு சிறை மாற்றும் போது, கைதியின் கைகளோடு, ஒயில்டின் கைகளையும் சேர்த்து விலங்கு போட்டு முக்கியமான ஜங்ஷன்களில் நிற்க வைப்பார்கள்............இ ர ண் டு வருஷங்களும், இவன் தண்டனையும் ஒரே சமயத்தில் முடிந்தது! ஊருக்கு வந்தான், மனைவி வரவேற்கவில்லை. *விவாகப் பிரிவு' செய்து கொண்டாள். லண்டன் வந்தான். இவனைப் பார்த்ததும், நண்பர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டனர். பெண்கள் கண்களை மூடிக் கொண்டனர். சிறு பையன்கள் ஓடிப் போய் பெற்றோர்களின் மடியில் ஒட்டிக் கொண்டனர். இவன் போகும் தெருக்களில், அனேகம் கதவுகள் திடீர் திடீர் என்று சாத்தப்பட்டன. ஓட்டலில் இருக்க இடம் கொடுக்கவில்லை. இப்படி மறுத்த லண்டனை விட்டுப் பாரிசுக்கு போனான். அடிக்கடி அழுதபடி அங்கே காலத்தைக் கழித்து வநதான். இந்த 'ஒப்பாரி வாழ்க்கை' யில்கூட சட்டையை அடகு வைத்து வாத்தியக் கருவி வாங்கி, சங்கீதப் பழக்கம் செய்து கொண்டான்.

சிறை அதிகாரியின் கொடுமையால் ஏற்பட்ட காது வலி, இவனை 1909-ல் கொன்று விட்டது. கவிதையில் ஆரம்பமாகி, வசனத்தால் பலமடைந்து, சங்கீதத்தோடு இவன் வாழ்வு முடிந்துவிட்டது!

# புஷ்கின்

இங்கிலாந்துக்கு ஷேக்ஸ்பியர், இத்தாலிக்கு தாந்தே, பிரான்சுக்கு வால்டேர், ஜெர்மனிக்கு கதே—இதுபோல ரஷ்யாவுக்கு புஷ்கின்!

இந்த புஷ்கின், ஒரு வருஷம் குறைந்த பத்தொன்பதாவது நூற்றாண்டில் பிறந்தவன். இவன் தன் பதினோராவது வயதில் பிரஞ்சு மொழியில் எத்தனை எழுத்துக்கள், வார்த்தைகள், இலக்கியங்கள், உண்டோ அத்தனையும் படித்துத் தீர்த்து விட்டான்!

பிறகு, லைசி பள்ளிக்கூடத்தில் ஆறு வருஷம் படித்தான். சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்—இவைகளைப் பற்றி இங்கேதான் புரிந்து கொண்டான்; சொன்னான்; பக்கம் பக்கமாக எழுதினான்.

இவன் பேச்சில் ஆவேசம், எழுத்தில் நெருப்பு, ஆதரிக்க கூட்டம்—இவைகள் இருப்பதைக் கண்டு அரசாங்கம் பயந்தது. இவனை பயமுறுத்தியது. ஆறு வருஷங்கள் தேசத்துக்கு வெளியே அனுப்பி, போலீசின் பார்வைக்குள் வைத்திருந்தது. இந்த சமயத்தில், பைரன், வால்டேர், வால்டர் ஸ்காட், ஷேக்ஸ்பியர்—இவர்கள் எழுதிய புஸ்தகங்களை எல்லாம் புஷ்கின் படித்து முடித்தான். இப்படி இவன் 'பாதுகாப்பு கைதியாக' இருந்தபோது எழுதிய 'காவ்ரிலியாடா' என்ற நாஸ்திக காவியத்தை அரசாங்கம் இரண்டு ஐம்பது வருஷங்களுக்கு தடுத்து விட்டது!

புஷ்கின் பிறர் தேசத்தில் இருந்தபோது, பிறந்த தேசத்தில் புரட்சி ஏற்பட்டது. அதாவது, 14-12-1825 காலை 9-45 மணிக்கு மீன்

எப்போதும் இருப்பவர்கள்

பிடிப்பவர் குப்பத்திலிருந்து இந்தப் புரட்சி ஆரம்பித்தது. முக்கியமானவர்கள் ,எல்லாம் தூக்கில் தொங்க ஆரம்பித்தனர். இதைக் கேள்விப்பட்ட புஷ்கின ராஜ ஆட்சியை அழித்து விடுவதற்கு ஒரு ராட்சஸ புரட்சியை நடத்தியே தீருவது என்று நினைக்க ஆரம்பித்தான்.

தண்டனை தீர்ந்தது. மறுபடியும் புஷ்கின் மாஸ்கோவுக்கு வந்தான்: பழைய சிநேகிதர்களை சந்தித்தான். புரட்சித் திட்டங்களை விவேகத்தோடு சொன்னான் புரட்சிக்காரர்கள் வேகத்தோடு செய்தார்கள். இதைக் கண்டு ஜார் மகுடத்தோடு நடுங்கினான்.

'ஆயுதங்கள், முட்டாளை ஜெயித்து விடலாம்; ஆனால் அறிவாளியைத் தந்திரம் தான் வசப்படுத்த முடியும்' என்பதை ஜார் மன்னன் உணர்ந்து, உடனே புஷ்கினைக் கூப்பிட்டு அவனுக்கு அரசாங்கத்தில் ஒரு பதவியைக் கொடுத்தான்.

இவன் தனது முப்பத்திரண்டாவது வயதில் 'கோன்சரோவா' என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். இவள் உலக அழகிகளுள் ஒருத்தி. அதனால் எல்லோருக்கும் அவள்மேல் இச்சை இருந்தது. ஜார் அரசன் சாகஸமாக புஷ்கின் மனைவியை தன் காமப் பத்தினியாக ஆக்கிக் கொண்டான்! அரசனுக்கும், இவளுக்கும் இந்த 'இரவு நேர நடத்தை' நிற்காமல் நீடித்துக் கொண்டே இருந்தது. இவள் செய்து வரும் இந்த ஆரம்ப அயோக்கியத்தனம் புஷ்கினுக்குத் தெரியாது.

ஒழுக்கத்திலிருந்து ஒரு தடவை தடுமாறிய இவள், இரண்டாவதாக ஆந்திஸ் என்ற அழகனுக்கும் தன் இரட்டை உதடுகளைத் தந்து வந்தாள்!

இப்படி இவள் புஷ்கினுக்கு மனைவியாகவும், பிற புருஷர்களுக்குக் காதலியாகவும் இருந்து வருவது ரகசியமாக இருந்தாலும் ஜனங்களுக்கு தெரிந்து விட்டது. உடனே தம்பட்டம் தட்டினர். புஷ்கின் புரிந்து கொண்டான். புரிந்து கொண்டு, 'அழகான வஸ்துக்கள் அநேகமாக எச்சரிக்கையோடு வாழ்வதில்லை. உலகம் அப்படி வாழ விடுவதும் இல்லை' என்று தன் காதுகளுக்கே சொல்லிக் கொண்டான்! இதைப் பற்றி இவளிடம் ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை. இருந்தாலும் இப்படி செய்து விட்டாளே என்ற வேகம். அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

ஆத்திரம் தாங்க முடியாத இவன் ஆந்திஸை சண்டைக்கு அழைத்தான்.

மறுநாள் ஜனவரி மாதம் 27-ந் தேதி காலை செயின்ட் பீட்டர்ஸ் பார்க்கில் ஒரு மைதானத்தில் இருவரும் சந்தித்தனர். ஒருவருக்கொருவர் சுட்டுக் கொள்ளலாம் என்று, அதிகாரி முன் அறிவிப்பு கொடுப்பதற்குள், வெடுக்கென்று ஆந்திஸ் தன் கை துப்பாக்கியால் புஷ்கினை சுட்டு விட்டான். புஷ்கின் குறைந்த உயிரோடு குதிரை வண்டியில் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டான். இதைக் கேள்விப்பட்டு கொதிக்கும் கண்ணீரோடு நண்பர்கள் ஓடி வந்தனர். புரட்சிக்காரர்களும் மாறுவேஷத்தோடு பிரேதமாகப் போகும் புஷ்கினை சுற்றிக் கொண்டார்கள். மனைவியும் அழுதபடி வந்தாள். அவள் வருவதை சிநேகிதர்கள் சொன்னார்கள். 'தடுத்து விடுங்கள்; அவள் என்னைப் பார்க்க வேண்டாம். அதற்குப் பதிலாக என் குழந்தைகளைக் கொண்டு வாருங்கள். அந்த அரும்பு உதடுகளை முத்தமிட்டு என் இறுதி மூச்சை முடித்துக் கொள்கிறேன்' என்று தடுமாறித் தடுமாறிச் சொன்னான்.

பிறகு குழந்தைகள் இருக்கும் இடத்துக்கு அவனே நகர்ந்து சென்று 'குழந்தைகளே!

நீங்கள் இருக்கப் போகிறவர்கள். நான் இதோ இறக்கப் போகிறவன். தாய் செய்த பாபத்தை நீங்களும் செய்து விடாதீர்கள்' என்று ஆசீர்வதித்தான். அப்போது ஒரு சிநேகிதன் 'என்ன இருந்தாலும் உங்களைப் போன்ற உலக அறிஞனுக்கு இப்படிப்பட்ட சாவு வந்திருக்கக் கூடாது' என்றான். அதற்கு புஷ்கின் 'சாவு எந்த விதமாகவும் வரலாம்; ஆனால் அதன் காரணம் மட்டும் கௌரவம் உள்ளதாக இருக்க வேண்டும்!' என்று தன் கடைசி வார்த்தைகளாகச் சொன்னான். அவன் தலை சாய்ந்தது.

10-2-1837 பகல் 2-45 மணிக்கு புஷ்கின் இறந்தான்.

இவன் சாவுக்காக அரசனும், பிரபுக்களும் சந்தோஷப்பட்டாலும், ரஷ்ய ஜனங்கள் தம் இதயத்தாலும், இரண்டு கண்களாலும் அழுதனர்! இவன் சிஷ்யன் லெர்மான்டோவ் என்பவன் ஒரு 'பிரேதக் கவியை' சொல்லிக்கொண்டே எழுதினான். இருந்தவர்கள் கேட்டுக் கொண்டே அழுதார்கள்.

புஷ்கின் சவத்தை அரசாங்கம் பகல் நேரத்தில் புதைக்க விடவில்லை. கல்லறைக்குத் திரண்டு வரும் கூட்டத்தையும் தடுத்தது. இவன் சவப் பெட்டிமீது ரோஜாப் பூவின் ஒரு இதழ்கூட உதிரவில்லை. இவனுக்காக ஆலய மணியின் நாக்கும் அசையவில்லை!

இருட்டு நேரத்தில் விளக்கு வெளிச்சம்கூட இல்லாமல் சில ஏழை விவசாயிகள், செத்துப்போன புஷ்கினை முதுகு நோக சுமந்து வந்து ஒரு சாதாரண இடத்தில் புதைத்தார்கள்......

புஷ்கின் எழுதிய புஸ்தகங்களில் எண்ணத்துக்காகவே வார்த்தைகள் இருக்கின்றன. 'தேவைக்கு மீறி வளருகின்ற நகத்தை வெட்டுவதுபோல

என் இலக்கியத்தில் எதையும் வெட்டிவிட முடியாது. நான் ஏற்படுத்தும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவசியத்துக்காக வளரும் பல்லைப் போன்றது' என்று அவனே சொல்லிக் கொள்கிறான்.

நாஸ்திகத்தை நிச்சயப்படுத்துவதற்காக புஷ்கின் பல புத்தகங்கள் எழுதினான். தன் புத்தகங்களுக்கு இவன் யாரிடமும் முகவுரைக் கேட்பதில்லை. முகவுரை வாங்குவதே ஒரு பலஹீனம் என்று நினைத்தான்.

இவன் தன் 'கோட்டு எப்படி இருக்கிறது? சட்டை எப்படி இருக்கிறது? என் அழகு எப்படி இருக்கிறது?' என்று மற்றவர்களைக் கேட்டிருக்கிறானே தவிர, 'என் எழுத்து எப்படி இருக்கிறது?' என்று தன் சொந்த நண்பனைக்கூட கேட்டதில்லை! ஏனென்றால் தனக்கு எதிரேயே தன் நண்பன் முட்டாளாவதை இவன் விரும்பவில்லை!

# ஆஸ்ட்ரோ இவஸ்கி

இப்போது இருப்பவர்களுக்கு நிச்சயமாக நான் ஒரு முட்டாள்; எனக்கு நான் எப்போதுமே புத்திசாலி; இதை, என் சாவுக்குப் பிறகு இருக்கும் காலங்கள் ஒப்புக்கொண்டே வரும்.''

இப்படி ஒரு நூறு வருஷங்களுக்கு முன் தன்னைப் பற்றி தானே விமர்சனம் செய்து கொண்டான் ரஷ்யாவில் ஒருவன். அவன்தான் ஆஸ்ட்ரோ இவஸ்கி.

இவன் முழுப் பெயர் அலெக்சாண்டர் நிகோலோ ஈவிச் ஆஸ்ட்ரோ இவஸ்கி. இவன் மாஸ்கோ பட்டணத்தை ஒட்டியுள்ள சேரியொன்றில் 1823-ல் பிறந்தான்.

இவனுக்கு சின்ன வயசிலேயே 'நாடக் ஷோக்கு' அதிகம். அதனால் எந்த நாடகத்தையும் பார்க்காமல் விடமாட்டான். அதிலும், மோட்சாலாவ், ஷேப்கின், பெலின்ஸ்கின் போன்றவர்களின் நாடகங்கள் என்றால் அவனுக்கு உயிர். முண்டியடித்துக் கொண்டு எப்படியாவது முதலில் பார்த்து விடுவான்.

இவன் தகப்பனார் கொஞ்சம் வக்கீல் ஞானம் தெரிந்தவர். அதனால், பையனுக்கும் அது ஏற்படட்டும் என்று படிப்பதற்கு ஏற்பாடு செய்தார். ஆனால் இவஸ்கியின், ஆசையெல்லாம் நாடகத்தின்மீதே இருந்ததால், பட்டம் வாங்காமலேயே படிப்பை நடுவில் நிறுத்தி விட்டான்!

இவன் தன் 25-வது வயதில் 'குடும்ப சந்தோஷம்' என்ற நாடகம் எழுதினான். இவன்

எழுதிய முதல் நாடகம் இதுதான். இதை எழுதி ஆறு மாதம் ஆவதற்குள் 'உன் வட்டாரத்தில் வைத்துக்கொள்' என்ற இன்னொரு நாடகத்தையும் எழுதினான். இந்த இரண்டையும் ஜனங்கள் ஒப்புக் கொண்டனர்; அவனை உச்சியில் வைத்தும் புகழ்ந்தனர்.

“ரஷ்யாவின் இலக்கிய கவுரவத்தை முழு உலகத்துக்கும் இழுத்துக் கொண்டு போகக் கூடியவன் இவஸ்கி ஒருவன்தான்” என்று இவன் காலத்தில் புகழ் பெற்று விளங்கிய ஷெவிரேவ் என்ற விமர்சகன் இவனைப் பற்றி சொல்லியிருக்கிறான். அந்த நேரத்தில் அதிமேதாவி என்று மாஸ்கோ ஜனங்களால் உச்சரிக்கப் பட்டு வந்த கிரிபோயிடவ், கோகல், ஒன்விசின் போன்றவர்களும், “நாங்கள் புத்திசாலிகள்தான்; இருந்தாலும் இவஸ்கி மகா மேதாவி; இதை நாங்களே கூச்சப்படாமல் சொல்லி விடுகிறோம்” என்று இவனைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

இவன் 1852-லே 'கல்யாணப் பெண்' என்ற நாடகத்தை எழுதினான். மறு வருஷத்தில், 'அதிக வருமானம் கொண்ட வேலை' என்ற இன்னொரு நாடகத்தையும் எழுதினான். இதை சர்க்கார் தடுத்தது; தண்டனையும் தந்தது. இந்த சமயத்தில்தான் இவன் எழுதும் ஞாபகமே இல்லாமல் இருந்தான்.

பிறகு, 1859-லிருந்து 'புதிய இரண்டு சிநேகிதரைவிட, பழைய ஒரு சிநேகிதனேமேல்'—'சிநேகிதரிடம் தாராளமாய் பழகுதல்'—'கறுப்பு நாட்கள்'—'பெருங் காற்று'—'காட்டு நிலம்' ஆகிய நாடகங்களை எழுதி வந்தான்; நீண்ட வருஷங்களுக்குப் பிறகுதான் முடிக்க முடிந்தது.

இவஸ்கி, இப்படி நீர்வீழ்ச்சி போல தொடர்ச்சியாக எழுதி, நாடகம் போட்டு காண்

பிக்கும் தியேட்டர்களை 50 வருஷங்களாக ஆக்ரமித்துக் கொண்டான். இவன் அதிகமாக எழுதினுன். ஆனுல், குறைவாக பணம் கிடைத்தது. இதுபற்றி "நண்பா! என் திறமையை நினைத்து கைதட்டும் ஜனங்களுக்கு, என் குடலில் இருந்துவரும் பட்டினி தெரியாமல் இருக்கிறது!" என்று இப்படி தன் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதியிருக்கிருன்.

சில காலத்துக்குப் பிறகு இவஸ்கி தியேட்டருக்கு நாடகம் எழுதுவதை நிறுத்திக் கொண்டான். மகா இலக்கியங்கள் எழுத நிச்சயப்படுத்தினுன். உட்கார்ந்து நான்கு ஆண்டுகள் எழுதினுன். ஓயாமல் எழுதினுன். காலங்களை நிச்சயப்படுத்தும் ஆறு நாடகங்களை தேசத்துக்குத் தந்தான். 'வாயாடியை வழிக்குக் கொண்டு வருதல்' என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்தை ரஷ்ய வார்த்தையில் எழுதி வைத்தான்.

"எனக்கு அதிகமாக தன்னம்பிக்கையை உண்டாக்கி வரும் பருவம் வயோதிகம் தான். சாவைப் பற்றி நான் அதிகம் நினைத்திருக்கிறேன். அடிக்கடியும் நினைத்திருக்கிறேன். ஆனுல், ஒரு தடவை கூட அதற்காக பயந்ததே கிடையாது!" என்று தன் குறிப்பு புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிருன்.

இவஸ்கி தன் அந்திம காலத்தில் 'சண்டை வீரன்' 'மேரி ஸ்டுவர்ட்' என்ற நாடகங்களை எழுதினுன். எழுதி, முதலில் மக்களின் மனதையும், இரண்டாவதாக இலக்கியத்தையும் ஜெயித்து விட்டான்.

1823-ல் பிறந்து இதுவரையில் இருந்துகொண்டே வந்த இவஸ்கி, 1886-ஆம் வருஷம் ஜூன் மாதம் 2-ந் தேதி இறந்து போனுன்.

இவன் எழுதிய நாடகங்களிலே நம்ப முடிந்த தகவல் இருக்கும்; யாரையும்

ஜெயிக்கும் புதிய நினைவுகள் இருக்கும்; வார்த்தையில் தற்பெருமை இருக்கும். ஆனால், இவஸ்கி அப்படிப் பட்டவனல்ல!

இவஸ்கி அதிகமாக பேச மாட்டான். சொல்லுவதைச் செய்யாமல் தோற்றதாகவும் தெரியவில்லை. தன்னைப் பற்றி இவன் சரியாகச் சொல்லுவான். இது பிறருக்குத் தற்பெருமை; ஆனால் இவனுக்கு சரியான விமர்சனம்.

சாவு மட்டும் அவன் உயிருக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் கொடுத்திருந்தால் ரஷ்ய வார்த்தைகளுக்கு ஒரு புதிய அகராதி கிடைத்திருக்கும்; இன்னும் கொஞ்சம் புதிய ஞாபகங்கள் உலகத்துக்கும் தெரிந்திருக்கும்!

# கன்பூசியஸ்

அடிக்கடி அழுதவன்; அளவுக்கு மீறிய உயரம், அதுவும் ஒன்பதரையடி இருந்தவன்; ராணி 'நான்சியா'வை முத்தமிட்டு இருக்கலாம் என்று, சிஷ்யர்களால் சந்தேகிக்கப்பட்டவன்; ஆயுள் காலம் முழுவதும் ஞானியாகவும், அதிலே, சில வருஷங்கள் சர்வாதிகாரியாகவும் இருந்து பார்த்தவன்—'கன்பூசியஸ்.'

முதல் மனைவிக்கு ஒன்பது பெண்கள் பிறந்தும், ஆண் குழந்தை இல்லையே என்ற குறையைப் போக்கிக் கொள்ள, அறுபத்து நான்கு வயதான 'ஹோ' என்ற ஏழை சைனுக்காரன், இரண்டாவதாக 'சென்வை' என்ற பதினறு வயதுள்ள பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். அவனுக்கும் சென்வைக்கும் பிறந்தவன்தான் கன்பூசியஸ்.

கன்பூசியஸ் பிறந்து ஒரு வருஷம் ஒன்பது நாள் முடிந்தது. அவன் தந்தை இறந்து ஒரு பகல், ஒரு இரவு ஆனது. கைக் குழந்தை கன்பூசியஸ் அப்போது அழுதான். தகப்பன் சாவுக்காக அல்ல, தாயின் பாலுக்காக!

விதவையான சென்வை தன் பிள்ளையைக் காப்பாற்ற பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. கோழி குரல் கொடுக்கும் நேரத்தில் எழுந்து, பறவைகள் கூட்டுக்குள் நுழைந்து கொள்ளும் நேரம் வரையிலும், சின்ன கன்பூசியஸ் செம்மறி ஆடுகளை மேய்ப்பான். சென்வை களத்து மேட்டில் நெல்லை அளந்து போடுவாள். இப்படி துன்ப வாழ்க்கை நடத்தி வந்தாலும், சென்வை

கன்பூசியஸை படிக்க வைத்தாள். படித்தான்; சரித்திரம், சங்கீதம், இலக்கியம், தத்துவம்—இவைகளின் முடிவு வரை தெரிந்து கொண்டான்.

சின்ன கன்பூசியஸ் வருஷங்களால் வாலிபனாகவும், யோசிக்கும் பழக்கத்தால் புத்திசாலியாகவும் இருந்தபோது, சென்னை இறந்து போனாள். இந்த மரணத்துக்காக கன்பூசியஸ் அழுதான். தாயின் சடலத்தை, தன் தோட்டத்தின் மேற்கு மூலையில், புஷ்பக் கொடிகள் இருந்த இடத்தில் புதைத்தான். சில காலத்துக்குப் பிறகு, தன் தகப்பனைப் புதைத்த இடத்தை, ஆப்பம் சுடும் கிழவி ஒருத்தி மூலம் கேள்விப்பட்டு, தோட்டத்தில் புதைத்த தாயின் பிரேதத்தைத் தோண்டி எடுத்து, அதைத் தன் தந்தையின் எலும்புகளோடு சேர்த்து மூடினான். 'என்னை உண்டாக்கிய இவர்கள் இவ்வளவு சீக்கிரத்தில் இறந்து விட்டார்களே' என்று தன் குறைந்த அதிர்ஷ்டத்தை நினைத்தும் அழுதான்.

பிறகு, ஊர் ஊராய்ச் சுற்றினான். உலக அனுபவங்களைச் சரிவரத் தெரிந்து கொண்டான். உபதேசிக்க ஆரம்பித்தான். ஒப்புக் கொண்டவர், சிஷ்யர்கள் ஆனார்கள்.

'லூ' பட்டணத்தில் ஒரு தடவை உபதேசம் செய்து கொண்டிருந்தபோது, அரசாங்கத்தின் அழைப்பு கன்பூசியஸுக்கு வந்தது. போனான். அரசன் கொடுத்த மந்திரிப் பதவியை ஒப்புக் கொண்டான். சில மாதங்கள் கூட ஆகவில்லை. பெரிய அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விட்டான்!

தன் சட்டங்களை எப்போதும் நெருப்பாகவே வைத்திருந்தான். ஆணும், பெண்ணும் சேர்ந்து போக அவன் அனுமதிக்கவில்லை. அவன் ஆளும் கோத்தில், தெருவில் தங்கக் கட்டி கிடந்தாலும் திருட மாட்டார்கள். வருஷாக்கிரக் கூட்டங்களில் அரசனும்

அவனும் பிரசன்னமாகும்போது, பொது ஜனங்களைப் பார்த்து, 'நீங்கள் ஒழுக்கத்திலிருந்து தடுமாறி விடாதீர்கள். தடுமாறினால் ஒரு கோப்பை விஷம், என் கைகளால் தரப்படும். உங்கள் இருதயத்தில் விரோத உணர்ச்சிகள் இருந்தால், அதை இப்போதே எடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் இந்த கன்பூசியஸ், வெட்டச் சொல்லுவதற்கும், சித்ரவதையைப் பார்த்துச் சிரிப்பதற்கும் தயங்கமாட்டான்' என்று எச்சரிக்கை செய்வான்.

ஒரு தடவை அவன் சொன்னபடியே சில ஏழைகளை மூன்று துண்டுகளாக வெட்டச் சொன்னான். இன்னொரு சமயம் ஒரு மந்திரியின் கண்களை, நெருப்பில் சிவந்த இரும்புக் கம்பிகளால் குத்தவும் சொல்லியிருக்கிறான். இதையெல்லாம் பார்த்தும் அரசன் எதுவும் கேட்பதில்லை. அவன் விஷயத்தில் மன்னன் வாய் மூடிக் கிடந்தது!

ஜனங்கள் கன்பூசியஸை வேரோடு வெறுத்தார்கள். அவனை விரட்ட வெளிநாட்டு வேந்தர்களும் தந்திரம் செய்தார்கள். கண்டாலே காமப் பைத்தியம் பிடித்துக் கொள்ளும்; அப்படிப்பட்ட அழகான பெண்கள் எண்பது பேரை, நீலக் குதிரைகளில் ஏற்றி, கையில் ரோஜாப் பூவைக் கொடுத்து, 'அந்த 'லூ' தேசத்து வேந்தனை வட்டமிட்டு உட்கார்ந்து கொள்ளுங்கள்' என்று 'சீ' தேசத்து வேந்தன் அனுப்பினான். வந்தார்கள். எண்பது அழகுகளையும், உள்ளே வராதபடி கன்பூசியஸ் தடுத்தான். அந்தப் பெண் புஷ்பங்கள், கோட்டைக் கதவுகளுக்கு வெளியே உட்கார்ந்து விட்டன. இதை ஊர் பார்த்தது; ஆச்சரியப்பட்டது! பிரபுக்கள் பார்த்தனர்; ஆசைப்பட்டனர். அரசன் கேள்விப்பட்டான்; கன்பூசியஸ் தெரிந்து கொள்ள முடியாதபடி, சாதாரண உடையணிந்து, அந்த அழகிகளின் மடியில் நித்திரை செய்ய ஆரம்பித்தான்!

இதை கன்பூசியஸ் தெரிந்து, கசந்தான். நேரே பார்த்தான்; வெறுத்தான். உட்கார்ந்திருந்த ஆசனத்தை உதைத்தான்; போய் விட்டான். இதற்குப் பிறகு ஐந்து வருஷங்கள் ஊர் சுற்றும் நாடோடியாக இருந்தான்!

கடைசியில் அவன் மஞ்சள் நதி ஓரத்தில் இருக்கும் 'வீ' தேசத்துக்கு வந்து சேர்ந்தான். அதை ஆளும் அரசி 'நான்சியா' நல்ல அழகி. ஆனாலும், நடத்தையில் அவள் ஒரு மலர். எத்தனை வண்டுகள் வந்தாலும் இடந்தரக் கூடியவள். அவள் கன்பூசியஸின் அழகைப் பார்த்து, ஆசையை நெஞ்சுக்குள் வைத்துக் கொண்டு, 'அதற்காக' அவனை அழைத்து வரச் சொன்னாள். சந்தித்தார்கள். அதுமுதல் அவன் இரவில் மட்டுமல்ல, பகலில்கூட அவள் பக்கத்திலேயே உட்கார ஆரம்பித்து விட்டான்!

ஒரு நாள் அவன் நான்சி ராஜாத்தியோடு வெள்ளைக் குதிரை பூட்டிய வண்டியில் போய்க் கொண்டிருந்தபோது, சிஷ்யர்களில் சிலர், 'அப்போது நீலக் குதிரையை மறுத்தவர், இப்போது வெள்ளைக் குதிரையை வரவேற்று விட்டாரோ' என்று பேசிக் கொள்வதைக் கேட்டு, கன்பூசியஸ் வண்டியை நிறுத்தச் சொல்லி 'ராணியிடத்தில் நான் ராஜாவாக இல்லை. ஞானியாகத்தான் நடந்து கொள்கிறேன். இதை நான் ஏற்படுத்திய மதத்தின் மேல் சத்தியம் வைத்துச் சொல்கிறேன். நம்புங்கள்' என்று சொன்னான்.

வயது முற்றிய காலங்களில் அவன் படுத்த படுக்கையில் இருந்தபடியே உபதேசம் செய்து வந்தான். தன் சாவு இன்னும் கொஞ்ச நேரத்தில் வரப் போகிறது என்று தெரிந்து கொண்ட ஞானி, 'சீன தேசத்தின் பெரிய மலை இதோ இடியப் போகிறது. விழட்டும், இது இனிமேல் விழ வேண்டியதுதான். என்

னிடம் கற்றுக் கொண்டவர்களே! என்னிடம் கேட்டுக் கொள்ள வந்திருப்பவர்களே! இந்தக் கிழவன் இதுவரை சொன்னது போதும். அதற்கு மரியாதை கொடுங்கள். எனக்காக காத்துக் கொண்டிருக்கும் சவப் பெட்டியே! இரு! எனக்குப் பிடித்தமான திராட்சை இலைகளுக்கு ஒரு தடவை முத்தம் தந்துவிட்டு வந்து விடுகிறேன்' என்றான். பிணமானான்!

இந்த உலகத்தில் கன்பூசியஸ் எழுபத்து மூன்று வருஷங்கள்தான் இருக்க முடிந்தது. அவன் சவப் பெட்டியை 'ஜீ' நதிக் கரையில் புதைத்து, அதைச் சுற்றி, குடிசைகள் கட்டிக் கொண்டு மூவாயிரம் சிஷ்யர்கள் ஆயிரம் நாட்கள் ஓயாமல் அழுதார்கள். ஒருவன் மட்டும் ஆறு வருஷங்கள் அழுதுகொண்டே இருந்தானும்!

# வில்லியம் ஒயில்டு

இந்த உலகத்திலே, அதிக ஞாபக சக்தி உள்ள மெக்காலே இருந்தானே, அவனுக்குச் சரியான சரித்திர ஆதாரங்களைத் தந்து உதவிய, இந்த வில்லியம் ஒயில்டுதான், ஒரு இரண்டாவது ஷேக்ஸ்பியரை, அதாவது, ஆஸ்கார் ஒயில்டை பெற்றவன்.

இவன், வைத்தியத்தில், வரும் பெண்களை வசப்படுத்தி முத்தமிடுவதில், புஸ்தகங்கள் எழுதுவதில், பத்திரிகை நடத்துவதில்—மிகவும் கெட்டிக்காரன். ஜேன், இவன் மனைவி. இவளுக்கு கவி எழுதத் தெரியும். அதனல், இவனுக்கும் கவி எழுதும் பழக்கம் வந்தது.

"ஒயில்டு, விவாதிக்கும்போது அறிஞன். கோபப்படும்போது முட்டாள். பெண்களைப் பார்த்துவிட்டால் மன்மதன். இவன், இருக்கும் மனிதர்களுக்கு போதிக்கிறுன். ஆனல், அவர்களோடு பழகத் தெரியவில்லை." என்று இப்படி இவனைப் பற்றி அயர்லந்து மனிதர்கள் அடிக்கடி பேசிக் கொள்வது உண்டு.

தாசி, அடிக்கடி தன்னை அலங்கரித்துக் கொள்வதுபோல, இந்த ஜேனும், இந்த வில்லியமும் தங்களை அலங்கரித்துக் கொள்வார்கள். புருஷன் மனைவியான இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அப்போதே அவள் தாயானுள். அவன் தகப்பனுனுன். பிறகு, ஜேன் ஒருபெண் குழந்தை பிறக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தாள். பைபிள் வார்த்தைகளால் மட்டுமல்ல, ஒரு கவிதை எழுதி, அந்த வார்த்தைகளால்கூட தேவனைத் தொழுது வந்தாள். இவள் பிரார்த்தனையை தேவன் பலிக்க வைப்பதற்கு முன்பே, இவள் ஆசையை

வில்லியம் பலிக்க வைத்து விட்டான். கர்ப்பமானுள். குழந்தை பிறந்தது. ஜேன் எதிர்பார்த்தபடி பெண்ணல்ல. ஆண். அவன்தான் ஆஸ்கார் ஓயில்டு. அவனுக்குப் பிறகு ஐஸோலா பிறந்தாள்.

இதுவரைக்கும் ஒரு மனைவியை, அவள் இரண்டு உதடுகளை முத்தமிட்டு வந்தவன், இப்போது பல பெண்களின் பல உதடுகளை இவன் ஒரு வாயால் சுவை பார்க்கத் தொடங்கி விட்டான்.

இப்படி, வெளி இன்பம் அனுபவித்துக் கொண்டே வரும்போது...... ஒரு நாள்...... வெள்ளிக் கிழமை, மேற்கு சிவந்த அந்தி நேரத்தில் வில்லியத்தைத் தேடிக்கொண்டு ஒருத்தி, ஆஸ்பத்திரிக்கு வந்தாள். வந்த வாலிபப் பெண்ணை வில்லியம் வரவேற்ருன்: "எனக்குக் கண்நோய். அதற்காக வந்தேன்" என்ருள்.

"இவள், என் கண்ணுக்கு ஏற்றவள். எப்படியாவது அனுபவித்துவிட வேண்டும்" என்று எண்ணிக் கொண்டான் பெயரைக் கேட்டான். "மேரி" என்ருள். "எங்கேயோ பார்த்ததுபோல் இருக்கிறதே" என்ருன். "இருக்கலாம், நான் பேராசிரியரின் மகள். என் தந்தை ட்ராவெர்ஸ். அவரை உங்களுக்குத் தெரிந்திருக்கும்" என்ருள். இப்படிச் சொல்லிக்கொண்டே வில்லியத்தைக் கண்ணுல் கூப்பிட்டாள்.

இவள் வைத்தியத்துக்கு வரவில்லை. சரீர வியாபாரத்துக்காக வந்திருக்கிருள் என்பதைப் புரிந்து கொண்டான். அவ்வளவுதான், அவளும் அவனும் சில நிமிஷ நேரத்துக்கு புருஷனும் மனைவியுமாக இருந்து கொண்டார்கள். இவர்கள் முத்தம், சத்தத்தோடும், தித்திப்போடும், நித்தம் வளர்ந்துகொண்டே வந்தது. அதை வளர்த்துக்கொண்டே வந்தார்கள். ஆனுல், அவள் முத்தத்துக்கு—இவன் முத்தம், அதற்குப் பணம், தந்துகொண்டே வந்தான்.

அவனுக்குப் பணம் கொடுப்ப தற்காக, வில்லியம் அடிக்கடி பெட்டியைத் திறப்பான். மேரி, அதை வைப்பதற்காகப் பெட்டியைத் திறப்பாள்.

இந்த விபசாரி, சொந்த மனைவி ஜேனை விலக்கி விடும்படி, வில்லியத்துக்கு யோசனை சொன்னாள். அதற்கு அவன் ஊமையாக இருந்தான்.

எத்தனையோ பெண்களை ருசி பார்த்த அவனுக்கு, இப்போது மேரியின் உதடுகளும் கசக்க ஆரம்பித்து விட்டன. அவள் ஸ்நேகத்தை அறுத்துக் கொள்ள விரும்பினான். இதைத் தெரிந்துகொண்ட மேரி, பாத்தியதை கொண்டாட ஆரம்பித்து விட்டாள்.

அவள் வாயாடித் தனத்துக்கு வில்லியம் பயந்தான். பணம் கொடுத்தான். இவன் பலஹீனத்தைத் தெரிந்து கொண்ட மேரி, அடிக்கடி பணம் கேட்டு வந்தாள். மீண்டும் மீண்டும் கொடுத்தான். இன்னும் வேண்டும் வேண்டும் என்று நச்சரித்தாள்.

"கண்டிப்பாகத் தரமுடியாது. உன் உதடுகளை, இனி யாருக்காவது விற்றுக்கொள். அங்கே கேள். இங்கே வந்தால்.........நான் டாக்டர். என்னிடம் விஷம் இருக்கிறது".....என்றான்.

"உன் செல்வாக்கால், என்னை எதுவும் செய்ய முடியும். இருந்தாலும், நான் ஏமாந்தவளல்ல. தேள் கொட்டாமல் தன் கொடுக்கை முறித்துக் கொள்ளாது, இரு பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிப் போய் விட்டாள். அன்று இரவு மறைந்து, மறு நாள் சந்திரன் தெரிந்தது. மேரி, ஒரு வாலிபனை தன் அறைக்கு அழைத்துக்கொண்டு வந்து, முதலில் மதுவையும், பிறகு முத்தத்தையும் கொடுத்து, வில்லியத்தை அவமானப்படுத்தும் கேவலக் கவிதைகளை, எழுதச்

சொன்னாள். எழுதும்போது, அவன்மேல், ரோஜா இதழ்களை உதிர்த்துக்கொண்டே இருந்தாள்.

கவிதை முடிந்தது ! அவர்கள் முத்தம் முடிந்தது !! அந்த இரவும் முடிந்தது !!!

மொட்டைச் சுவரிலே, மரத்தின் இடுப்பிலே, விளக்குக் கம்பத்திலே, கல்லறை வாசலிலே, ஆலயக் கதவிலே, எழுதிய கவிதையின் கையெழுத்துக் காகிதங்களை ஒட்டினாள்.

"கண் வைத்தியம் செய்து கொள்ள, டாக்டரிடம் போனேன். மருந்து கொடுத்தான். குடித்தேன். மயக்கம் வந்தது. அவன் மடியில் விழுந்து விட்டேன். அதற்குப் பிறகு, இந்த உலகம் எனக்குத் தெரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்து, ஒருவித புதிய உணர்ச்சியால் விழித்துக் கொண்டேன். விழித்ததும், இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு முன், என் உடம்பின்மேல், அந்த டாக்டரைப் பார்த்தேன். என்னைக் கெடுத்துக் கொண்டிருந்த அவன், உடனே ஓடி விட்டான். அவன், —அந்த டாக்டர், ஒரு பெரிய மனிதன்—இந்த ஊருக்கு ; உங்களுக்கு. அவன்—ஒரு மஹா பாவி—எனக்கு ; நம் வேதத்துக்கு. அவன்தான், இந்த மேரியைக் கெடுத்த வில்லியம் ஒயில்டு."

கவிதையின் இந்த வாசகம் பலர் கண்ணுக்கும் பட்டது. இரண்டொரு இரவு நேரத்துக்குள் முழு அயர்லந்துக்கும் தெரிந்து விட்டது. இந்த பிரஸ்தாபத்தைக் கேட்டும், வில்லியம் தனக்குக் காதுகளே இல்லாதவன் போல நடித்துக் கொண்டான். வில்லியத்தைக் கண்டு சிரித்த ஜனங்கள், மேரியைக் கண்டும், அவள் தகப்பன் ட்ராவர்ஸைக் கண்டும் சிரித்தது. போராசிரியன், தாங்க முடியாத அவமானத்தால் தலை குனிந்தான். டாக்டர் மீது வழக்கு தொடுத்தான். வில்லியம்—மேரி வழக்கு ஒரு வெள்ளிக்கிழமையில் ஆரம்பமானது. விடாமல் ஆறு

மாதம் விசாரணை நடந்தது. பெண்ணைக் கெடுத்ததற்காக, போராசிரியன் பணம் கேட்டான்; அவனுக்கு வேண்டியவர்கள் தூண்டிவிட, அதைப் பவுனாகக் கேட்டான்; அதையும் 200 ஆயிரமாகக் கேட்டாள்—மேரி! ஆனால், நீதிபதி—கன்னியின் கற்பைக் கெடுத்ததற்காக, வில்லியத்துக்கு ஓரே, ஒரு காலணா அபராதம் போட்டார்.

விசாரணைக்குப் பிறகு, வில்லியம், தன் ஆடம்பரத்தை விட்டு விட்டான். அழுக்குத் துணிகளையே உடுத்தி வந்தான். எந்தக் காரியத்திலும் சரியாக ஈடுபடுவதில்லை. நண்பர்களிடம் பேசுவதையும் குறைத்துக் கொண்டான். தான் செய்துவிட்ட பாபங்களை, அடிக்கடி நினைத்துக் கண்ணீர் விட்டான். நினைவின் தொந்தரவுகளைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்காக குடித்துக்கொண்டே இருந்தான்.

அவனுடைய துன்பம் கலந்த நேரத்தில் ஒரு நாள். அதுவும் வெள்ளிக்கிழமை அந்தி நேரம். அப்போது அடித்துக் கொண்டேயிருந்த ஆலயமணியின் நாக்கு, திடீரென்று அறுந்து விழுந்தது.

வில்லியத்தின் மூச்சும், அவனைவிட்டு விலகிக் கொண்டது.

தமிழ் முழக்கம் அச்சகம், சென்னை - 14.